## Gospel Journey Karur and Church Buliding Opening at Minjur February 2016



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Apr 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter on Saturday 5.30P.M &Tamilan TV on Monday & Saturday 7.30 P.M

**To**

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 | ஏப்ரல் 2016 | கனி 5




**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 7.30-7.45 p.m and Every Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 188

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை ஜூலை மாத இதழில்!

1. தேவன் யாருக்கு சொப்பனத்திலே தோன்றி; நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய் என்றார்?
2. நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் யாரோடே முகமுகமாய்ப் பேசினார்?
4. சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. அஞ்சனம்பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களுமாயிருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் என்ன செய்யப்படவேண்டும் என பழைய பிரமாணம் போதித்தது?
6. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் எதில் விழித்திருங்கள் என அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்?
7. முகங்குப்புற விழுந்து, தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்க சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்று விண்ணப்பம் பண்ணினவர்கள் எவர்கள்?
8. எவைகளை அற்பமாயெண்ணாதிருங்கள்?
9. பழைய பிரமாணத்தின்படி நீ பொருத்தனை பண்ணாதிருந்தால், உன்மேல் என்ன இல்லை?
10. எந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால் அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள் என்றார் பவுல்?

### போட்டியாளர்கள் கவனிக்க...

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்து முகவரிகளை சேகரித்து ஆங்கிலத்தில் தெளிவாக மாவட்டம் மற்றும் பின்கோடு உடன் அனுப்பி வைப்பவர்களுக்கு ஒரு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 6

நாள்: ஏப்ரல் 23 -ம் தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 2.00 மணி வரை
ஆர்.சி.தெரு, கானூர் -608 701
காட்டுமன்னார்கோவில் (வழி)
கடலூர் மாவட்டம்
சகல தொடர்புக்கும்:
சகோ:C. அந்தோனிசாமி
9585269665



- பழைய பிரமாணத்தின்படி புசிக்கத்தகாத பறவை - லேவி.11:19
- தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும் - எரே.8:7
(தேவன் இவைகளுக்கு கொடுத்த பெரிய ஆசீர்வாதம்)
- இதற்கு கர்த்தர் ஏற்படுத்திய குடியிருப்பு தேவதாரு விருட்சங்கள் - சங்.104:17
- நாரை தன் செட்டைகளாலும் இறகுகளாலும் பறக்கிறதற்குச் சமானமல்லவோ? - யோபு 39:13
(கர்த்தர் யோபுவோடு பேசும்போது)
- கொக்கு வகையில் எந்த வகையான கொக்காக இருந்தாலும் அவைகளின் கழுத்து நீண்டும், கால்கள் நீண்டும் காணப்படும்.



சிறுவர் பகுதி

# யாசோன்

வேதபகுதி: அப்போஸ்தல நடபடிகள் 17:1-10



இந்த யாசோன் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? தெசலோனிக்கே பட்டணத்தில் உள்ள ஒரு விசுவாசி. பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்று அங்கே யூதருடைய ஜெப ஆலயத்தில் பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் சென்று, மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை கொண்டு அவர்களுடனே பேசிவந்தான்.

அது என்னவென்றால் கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் திருஷ்டாந்தப்படுத்தினான். அதைக்கேட்ட யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். இதிலே விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள். அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுவந்து; உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான் இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள்.

பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள். உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

யூதர்கள் மத்தியிலும், கிரேக்கர் மத்தியிலும், தெசலோனிக்கே பட்டணத்திலே சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருந்த யாசோனைப் பற்றி கேள்விப்பட்டீர்கள் அதைப்போல நீங்களும் வருங்காலத்தில் சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருப்பீர்களா?

**மனப்பாட வசனம்:**

“சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்” (அப்.8:4)




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 16 ஏப்ரல் -2015 கனி - 5


ஆசிரியருரை

## கொடுத்தலும், பெற்றுக்கொள்ளுதலும்

## Giving and Getting

நம்முடைய ஆண்டவர் இயேசு சொல்லுகிறார்; "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" (லூக்.6:38). கொடுத்தலைப் பற்றிய உபதேசத்தில் அநேகர் புரிந்துகொள்ளாமலே இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்ட அநேகரை நாம் வேதாகமத்தில் பார்க்கமுடியும். அவர்கள் கொடுத்தது கொஞ்சம், பெற்றுக்கொண்டது சொல்லமுடியா ஆசீர்வாதம். ஆண்டவர் சொல்வதைப்போல கொடுக்கும்போது அவர்களுக்கு அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய்போடப்படும். நான் பலசரக்கு கடைவைத்திருக்கும்போது பலசரக்கு வாங்க வரும் நபர்களில் சிலருக்கு நான் அரிசியை படியில் அளக்கும் போது நன்றாய் குலுக்கிக் குலுக்கி அளந்துபோடுவேன். அதை மீண்டும் அளந்துபார்ப்போமானால் ஒரு படிக்கும் அதிகமாகவே இருக்கும். எல்லாருக்கும் அப்படியல்ல தொடர்ந்து நன்றாக வரவு செலவு பண்ணுகிறவர்களுக்கு அவ்விதமாக செய்வேன். இங்கே ஆண்டவர் கொடுக்கிறவர்களுக்கு அந்தவிதமாக கொடுக்கப்படும் என்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் அநேக தேவமனிதர்களைப் பற்றி படிக்கின்றோம். குறிப்பாக நாம் யோபு என்ற தாசனை குறித்துப் படிப்போமானால் அவன் உயிரோடிருந்த நாட்களில் அவனால் நன்மையை பெற்றவர்கள் அதிகமாக இருந்தார்கள். அந்த அளவுக்கு அவன் கொடையாளியாக இருந்தான். "அவன் இனத்தார்களில் திருப்தியாகாதவனைக் காண்பிப்பவன் யாரென்று என் கூடாரத்தின் மனுஷர் சொல்லார்களோ? பரதேசிவீதியிலே இராத்தங்கினதில்லை; வழிப்போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன்" என்கிறான் யோபு (யோபு 31:31,32). அந்த அளவு ஜனங்களை நேசித்து அவர்களை போஷித்தான். யோபு பெரிய சீமானாய் இருந்தான். அவனிடத்தில் சென்று வெறுமையாய் திரும்பினவர்கள் ஒருவரும் இல்லை என்றே சொல்லவேண்டும். அந்தஅளவு கொடுத்து அனுப்பினான். அப்படிப்பட்டவனுக்கோ ஒரு சோதனை வந்து அவனுக்குள்ளயாவும் பறிபோய்விட்டது. ஆனால் யோபு தேவனை தூஷிக்கவில்லை, அவரைப் பற்றி குறைசொல்லவுமில்லை. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.


அவனோ, முடிவிலே இரட்டிப்பான ஆசீர்வதங்களை பெற்றுக்கொண்டான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். "அப்பொழுது அவனுடைய எல்லாச்

சகோதரரும் சகோதரிகளும், முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து, அவன் வீட்டிலே அவனோடே போஜனம்பண்ணி, கர்த்தர் அவன்மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு தங்கக் காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்" இது கதையல்ல உண்மைச் சம்பவம் (யோபு 42:11). ஆண்டவர் நாமத்தினிமித்தம் கொடுத்தவர்கள் எவரும் தரித்திரர் ஆனதில்லை. யோபு கொடுத்ததைக் காட்டிலும் பன்மடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான். அன்பானவர்களே, ஆண்டவர் சொன்ன வசனத்தில் நாம் தியானித்தபடி அமுக்கிக் குலுக்கி சரிந்துவிழும்படி யோபுவுக்கு கொடுக்கப்பட்டது. அவன் அவைகளைப் பெற்றுக்கொண்டான். அவனுக்கு வானத்திலிருந்து கர்த்தர் கொட்டவில்லை. மாறாக அவனுக்கு அறிமுகமானவர்கள் எல்லாம் ஒவ்வொரு தங்கக் காசையும், பொன் ஆபரணங்களையும் கொடுத்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் யூதஜனங்களை நேசித்து அவர்களுக்கு ஒரு ஜெபஆலயத்தைக் கட்டிக்கொடுத்த ஒரு நூற்றுக்கு அதிபதியைப் பற்றி படிக்கின்றோம். கொடுக்கக்கூடிய அநேகரை குறித்து நாம் கேள்விப்படுகிறோம். ஆலயம் கட்ட ஒரு சிறு உதவி கொடுப்பார்கள் அல்லது கதவு வாங்க பணம் கொடுப்பார்கள் அல்லது மின் விளக்குகள் வாங்க பணம் கொடுப்பார்கள். இவனைப் பற்றி அந்த ஜனங்கள் இயேசுவிடம் சொல்லும்போது; "அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்" (லூக்.7:5). அவன் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் ஆச்சரியமானது. நாமாக இருந்தால் நம்முடைய குடும்பத்தாருக்காக ஆண்டவரிடம் மன்றாடுவோம். அல்லது ஒரு பணக்காரனாக மாறவேண்டும் என வாஞ்சிப்போம். நூற்றுக்கு அதிபதியோ அப்படியல்ல, அவனுடைய வேலைக்காரனுக்காக ஆண்டவரிடம் மன்றாடுகிறான். எப்படியென்றால் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கையுள்ளவனாயிருந்தபடியால்; "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரவனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான் (லூக்.7:7). இதைக் கேட்ட ஆண்டவர் நான் இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 40 வருடங்களாக அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ட இலட்சக்கணக்கான இஸ்ரவேலரிடம் இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் காணவில்லை என்றார். அப்படியானால் அவனுடைய விசுவாசம் எப்பேர்ப்பட்டது என்று பார்த்தீர்களா? உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது. கர்த்தருக்காக நீங்கள் கொடுத்தது என்ன? பெற்றுக்கொண்டது என்ன? இவைகளைக்குறித்து என்றாவது சிந்தித்தது உண்டா? அன்பானவர்களே, இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல யாவருக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் மட்டுமே வேண்டிக் கொள்ளாமல் பிறரையும் நேசியுங்கள். அப்பொழுது தேவனுடைய ஆசீர்வாதங்களைக் காண்பீர்கள்.

ஒரு பாவியாகிய ஸ்திரீ இயேசுவுக்கு செலுத்தினதையும் அவள் பெற்றுக்கொண்டதையும் பார்ப்போம். பரிசேயன் ஒருவனுடைய வீட்டில் இயேசுவானவர் பந்தியிருக்கிறதை அறிந்து, "ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால்





# சந்தோஷத்தின் ௧௨ விதிகள்

## 12 Rules of Happiness

-TVOTI

1. ***எளிமையான வாழ்க்கை.*** *ஒவ்வொரு நாளும் பல காரியங்களைத் திட்ட மிடாதே. உன்னுடைய வாழ்க்கைப் பாங்கில் மிதமாக நிதானமாக இரு.*
2. ***நீ சம்பாதிப்பதை விட குறைவாக செலவுசெய்.*** *இது செய்வதற்குக் கடினமாகயிருக்கலாம், ஆனால் இது உன் மனதிருப்தியிலும் மன அமைதியிலும் பெரிய பிரதிபலன்களை கொடுக்கிறது.*
3. ***உருப்படியானவற்றை நினை.*** *உன்னுடைய மனதில் பயனுள்ள நினைவுகளை சேமித்துவை. ஒருவன் தன் இருதயத்தில் நினைக்கிறபடியே, அவன் இருப்பான்.*
4. ***இணக்கமுள்ள விருப்பத்தை வளர்த்துக்கொள்.*** *உன்னுடைய சுயவழியை விரும்புகின்ற மனோபாவத்தைத் தடுத்து விடு. மற்றொருவனுடைய கருத்தினை அறிய முயற்சிசெய்.*
5. ***நன்றியுள்ளவனாயிரு.*** *உனக்குக் கிடைத்துள்ள அனைத்து ஆசீர்வாதங்களுக்காக நன்றிசெலுத்தும் ஜெபத்துடன் ஒவ்வொரு நாளையும் துவக்கு. நீ நன்றியுள்ளவன் என்பதை தேவன் அறியட்டும்.*
6. ***உன்னுடைய மனநிலைகளை ஆண்டுகொள்.*** *உன்னுடைய மனோநிலை மற்றவர்களோடு சமாதானத்துடன் வாழ்வதில் மிக முக்கியமானது.*
7. ***உதாரத்துவமாய் கொடு.*** *உன்னுடைய நேரம், தாலந்துகள், தனிப்பட்ட குணம், பணம் போன்றவற்றினுடைய புத்தியுள்ள அர்ப்பணம் பெரிய மகிழ்ச்சியைக் கொண்டுவரும்.*
8. ***சரியான உள்ளெண்ணத்துடன் வேலை செய்.*** *தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் அன்பு செலுத்துவதில் வளருவதை நாடு, உன் வாழ்வில் முதலாவது தேவனுடைய சித்தத்தினைத் தேடு.*
9. ***மற்றவர்களிடத்தில் அக்கறையுள்ளவனாயிரு.*** *மற்றவர்களுக்குச் செய்கிற நம் சேவையில், தானாய் கொடுக்கும் வாழ்வில் இன்னொரு பொருளை உற்பத்திசெய்வதைப் போன்ற சந்தோஷத்தினை நாம் அறுவடை செய்கிறோம்.*
10. ***இன்று அதிகமானவற்றை உருவாக்கு.*** *ஞானமாய் இந்நாளை பயன் படுத்து அப்போது வருத்தமின்றி திரும்பிப் பார்ப்பாய்.*
11. ***பொழுது போக்கிற்காக நேரத்தை ஒதுக்கு.*** *ஓய்வு நேரத்தை விருப்பத்துடன் செலவழித்தால் கடினமான சூழ்நிலையிலிருந்து தளர்வினையும் பொழுது போக்கினையும் உனக்குக் கொண்டுவரும்.*
12. ***தேவனிடத்தில் நெருக்கமாக நிலைத்திரு.*** *நிலையான சந்தோஷம் தொடர்ச்சியான ஆவிக்குரிய போஷாக்கினைச் சார்ந்துள்ளது. தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால், நாம் அவருடைய நிலையான அன்பு மற்றும் பராமரிப்பின் வாக்குத்தத்தினைப் பெற்றிருக்கிறோம்.*

# வேதாகம அகராதி

## Bible Dictionary

-John S. Nathan
94444 43378

**– சென்றமாத இதழின் தொடர்ச்சி**

16. Cain - Lance, Possession ஈட்டி, உடமையைப் பெற்றவர்.

17. Caleb - Bold காலேப் - வலிமையானவர் எண்.13:6, எப்புன்னேயின் குமாரர்

18. Candace கந்தாகே எத்தியோப்பிய ராணி அனைவருக்கும் வழங்கப்பட்ட பட்டபெயர் அதேபோன்று எகிப்திய அரசர்கள் அனைவருக்கும் வழங்கும் பெயர் பாரோ (Pharaoh)

19. Cyrus - சூரியன் தனி.1:27 பெர்சி அரசை நிலை நாட்டியவர்.

20. Dagon - தாகோன், மீன் நியா.16:23 பெலிஸ்தியர்களின் தேசிய தெய்வம்.

21. Dan - தாண் நியாயாதிபதி ஆதி.30:6 யாக்கோபின் 5வது மகன்

22. Daniel- God is My Judge - தானியேல் யெகோவா என் நியாயாதிபதி

23. Darius- The Restraner - கட்டுப்படுத்தப்பட்டவர்

24. David - Beloved - பிரியமானவன் 1சாமுயேல் 16:12,13 ஈசாவின் இளையமகன் கோலியாத்தை வென்றவன், சவுலுக்குபிறகு அரசனானவன்.

25. Delilak - நலிவுறு, சோர்வடையாத

26. Deborah - தேனீ, குளவி, தீர்க்கதரிசி, நியாயாதிபதி, நியா.4:4

27. Demos - தேமா 1தீமோ.4:10 பவுலடியாரை விட்டு பிரிந்தவர்

28. Dorcas - தொற்காள், புறா, கலைமான் அப்.9:36 மரித்த இவரை பேதுரு உயிரோடு எழுப்பினார்.

30. E-den - Plesantness - இனிமையான (ஆதியாகமம்) ஆதாம், ஏவாள் வாழுந்த இடம்.

31. Elizabeth - எலிசபெத் தேவனுடைய உடன்படிக்கையானவர், சகரியாவின் மனைவி யோவான் ஸ்நானகனின் தாயார்.

32. Elisha - God is Salvation - எலிசா – தேவன் என் இரட்சிப்பு

33. E-Noch - ஏனோக்கு தேவனுடன் சஞ்சரித்தவர் மரணத்தை காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்டவர்.

34. Ephraim - Double portion - இரட்டிப்பான பலன் ஆதி.41:52 யோசேப்பின் மூத்த மகன் யோவான் 11:54

35. E-Sauharry - ஏசா உரோமம் நிறைந்தவர் ஆதி.25:25 ஏதோமியரின் தந்தை.

36. Esther - Star - எஸ்தர் நட்சத்திரம் யூத அடிமைப்பெண் பிறகு பெர்சியாவின் இராணியானார்.




100 வாசகர்களின் முழு முகவரிகளை சேகரித்து 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' அலுவலகத்திற்கு அனுப்பி முழு பரிசுத்த வேதாகமத்தை பரிசாக பெற்றவர்கள்.

1. **M.துரைச்சாமி – திண்டுக்கல் மாவட்டம்**
2. **P.கந்தசாமி – திண்டுக்கல் மாவட்டம்**
3. **C. ஆறுமுகபெருமாள் – தூத்துக்குடி**

**பாராட்டுகிறோம்**



துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:37,38). இயேசுவை அழைத்த பரிசேயன் அவருடைய கால்களுக்கு தண்ணீர் தரவில்லை, அவரை அவன் முத்தஞ்செய்யவில்லை, தலையில் எண்ணெய் பூசவில்லை. ஆனால் அழையாமல் உள்ளே வந்து இயேசுவின் பின்னாக அழுது கொண்டு அவளுடைய கண்ணீரினால் இயேசுவின் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். அவள் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்தது முதல் இயேசுவின் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள், மேலும் அவருடைய பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். இவள் மிகவும் அன்புகூர்ந்தபடியால் இவளுடைய அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார் லூக்கா7:48. இச்செய்தி வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு தேவ ஜனமே, நீங்கள் தேவனுடைய மக்களாயிருக்கலாம். அவரைப்பற்றி அறிந்திருக்கலாம், ஆனால் நீங்கள் எந்த அளவு அவரிடத்தில் அன்பு வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் எந்த அளவு நெருக்கமாயிருக்கிறீர்களோ அந்த அளவு அவர் உங்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கு கிருபை பொருந்தினவராயிருக்கிறார். வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின அற்புதமானவர், பரிசுத்தர், வல்லமையுள்ளவர், இப்பூமிக்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்த பாவியாகிய ஸ்திரீ அவருக்கு பரிமளதைலத்தை வாங்கிக்கொண்டுவந்தாள். அப்பொழுது இருந்தவர்கள் இவள் ஒரு பாவி என்பதைத்தான் அறிந்திருக்கக்கூடும். அவளுடைய இருதயத்தை அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. இருதயத்தை அறியும் ஆண்டவர் இயேசு அவளுடைய கண்ணீர் ஜெபத்தை கேட்டார். பரிசேயனோ, தான் ஒரு நீதிமான் என்று கருதி இவள் பாவியாயிருக்கிறாளே, இவர் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்று அறிந்திருப்பார் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அநேகர் இப்படிதான் தங்களுக்குத் தாங்களே போதகர்களாக இருந்துகொண்டு மற்றவர்களைக் குற்றப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அன்பு நேயரே, பாவியாகிய ஸ்திரீ இயேசுவிடம் அழுது கண்ணீர் விட்டதைப்போல, அழுது உங்களை ஒப்புக்கொடுங்கள் அப்பொழுது உங்களுடைய ஜெபத்தைக்கேட்டு கர்த்தர் உங்களுக்கும் இரங்குவார்.

சாறிபாத் ஊரில் ஒரு விதவை இருந்தாள். அவளிடம் எலியா என்ற தேவமனிதன் அனுப்பப்பட்டான். சாறிபாத் ஊரிலே பெரிய பணக்காரர்கள் இருந்திருப்பார்கள். ஆனால் கர்த்தர் அவனை இந்த விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். அந்த விதவைப் பெண்ணோ தானும் தன் மகனும் சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவளை சந்தித்த எலியா தீர்க்கதரிசி "அவளைப் பார்த்து; பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்" என்றான் (1இரா.17:13). அவளிடத்திலோ ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் வேறொன்றும் இல்லை. எலியா தீர்க்கதரிசியோ முதலாவது அடையை எனக்கு கொண்டுவா என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் அறிந்த சாறிபாத் விதவை சாகப்பேகிறபோதும் முதலாவது அடையை பண்ணி எலியா தீர்க்கதரிசி சொன்னபடி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். "கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை;

கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" (1இராஜ.17:16). இந்த சாறிபாத் விதவை பஞ்சகாலத்தில் நாம் வாழ்வது கூடாதகாரியம் இருக்கக்கூடிய கொஞ்சமாவையும் எண்ணெயையும் எடுத்து அடைபண்ணி சாப்பிட்டு தானும் தன் பிள்ளையாண்டானும் செத்துப்போகலாம் என முடிவெடுத்திருந்தாள். இருதயங்களைப் பார்க்கிற கர்த்தர் எலியாவை அந்த வீட்டிற்கு அனுப்பினார். இக்கட்டான சூழ்நிலையிலும் கர்த்தருடைய தாசனைபோஷிக்க அவள் அறிந்தபடியால் பஞ்சகாலமெல்லாம் போஷிக்கப்பட்டாள். அவள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் எத்தனை ஆச்சரியமானது என்று பார்த்தீர்களா?

இதுவரை கொடுத்தவர்களையும் அவர்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும் குறித்து தியானித்தோம். இப்பொழுது வாங்கியவர்களும் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட சாபங்களையும் பார்ப்போம். சிலர் பெற்றுக்கொள்வதிலே குறியாயிருப்பார்கள். மற்றவர்களுக்கு கொடுக்கும் எண்ணமில்லாதவர்கள். கேயாசி என்ற ஒரு உடன் ஊழியன் எலிசாவுடன் இருந்தான். அவன், "அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையில் வாங்காமல் அவனை விட்டுவிட்டார் நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு நாகமானைப் பின்தொடர்ந்தான்" (2இரா.5:20). இதைக் கண்ட நாகமான் அவன் வருவதை அறிந்து அவனுக்கு எதிர்கொண்டு வந்து கேட்கும்போது, இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் வந்தார்கள் அவர்களுக்கு இரண்டு மாற்றுவஸ்திரம் வேண்டும் என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான். அவனோ, இரண்டு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து அனுப்பினான். கேயாசியோ, அவைகளை தன் கூடாரத்திற்குள் வைத்துவிட்டு எலிசாவுக்கு முன்பாக நின்றான். எலிசா அவனை நோக்கி: எங்கே போனாய் என்று கேட்டதற்கு அடியான் எங்கும்போகவில்லை என்றான். இதை அறிந்த தீர்க்கதரிசியாகிய எலிசா, பணத்தை வாங்குகிறதற்கு இது காலமா? என்று சொல்லி; நாகமானை விட்ட குஷ்டம் உன்னையும் உன் சந்ததியையும் பிடித்திருக்கும் என்றான். உடனே கேயாசி உறைந்த மழை நிறமான குஷ்டரோகியானான். அன்பானவர்களே, பொய்சொல்லி பெற்றுக்கொண்ட கேயாசியின் முடிவை பார்த்தீர்களா? அதைப்போல குற்றமில்லாத இரத்தத்தை காட்டிகொடுத்த யூதாஸின் முடிவும் இப்படித்தானிருந்தது. 30 வெள்ளிக்காசுகளை பெற்றுக்கொண்ட யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்து நான்று கொண்டு செத்தான் (மத்.27:5). அப்போஸ்தலர்களிலே ஒருவனாயிருந்த இந்த யூதாஸ் சிறப்பான இடத்தை தன்னுடைய பணஆசையாலே இழந்தான். உங்களுடைய முடிவு என்ன? கொடுத்து ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்றீர்களா? அல்லது பெற்றுக்கொண்டு சபிக்கப்பட விரும்புகிறீர்களா? ஒரு நல்ல முடிவு எடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியமா?**

ஆம், வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது பாக்கியம். இது குறித்து பவுல் கர்த்தராகிய இயேசுசொன்ன வசனத்தை அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார். "இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்" (அப்.20:35). உலகத்தில் தேவனால் படைக்கப்பட்ட எல்லாமே அன்றுமுதல்



பெண்கள் பகுதி

# உடன்படிக்கைகள் - Covenants

-Paula Bates

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**2 தெசலோனிக்கேயர்2:13-17**ஆதிமுதல் தேவன் நம்மை தெரிந்துதெடுத்திருக்கிறபடியால் - நாம் இரட்சிக்கப்படுபடிக்கு தெரிந்து கொண்டார் - கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் அழைத்திருக்கிறார் - நிலைத்திருங்கள் காற்றடிப்பது போல் அசைக்கப்படாதிருங்கள் போதிக்கப்பட்டுள்ளதை விசுவாசியுங்கள்.

**2 தெசலோனிக்கேயர் 3:2-3** விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லை, ஆனால் உங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காத்துக் கொள்ளுகிற கர்த்தர் உண்மையுள்ளவர்.

பவுல் அவர்களை உற்சாகப்படுத்தினார் வசனம் 4 நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும் இனி மேலும் செய்வீர்களென்றும் உங்களைக் குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையா யிருக்கிறோம் என்று யார் பவுலிடம் இவர்களுக்கு இதைக் கட்டளையிடும்படி கூறியது? இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும்.

இன்று இயேசு தேவனோடு நமது உடன்படிக்கை அல்லது வாக்குத்தத்தமாயிருக்கிறார்.

**ரோமர் 8:29** இயேசு அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கிறார்.

**ரோமர் 8:32** தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுத்ததினாலே இயேசுவோடுகூட மற்றெல்லாவறையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

**கலாத்தியர் 2:21** நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே



**யோவான் 14:15** இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்றார்.

தேவனைப் பற்றி நன்றாக அறிய எனக்கு உதவுவதால் நான் பழைய ஏற்பாட்டு கதைகளை விரும்புகிறேன். அதிலுள்ள ஏறக்குறை ஒவ்வொரு கதையும் இன்றைக்கு எப்போதும் ஒரு சிறந்த பாடமாகவே இருக்கிறது. மோசே, நோவா மற்றும் தாவீதைப் பற்றிய கதைகள் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, ஆனால் நாமும் கூட அவைகள் மூலம் கற்றுக் கொள்ள முடிகிறது.

◆ கர்த்தர் ஏற்படுத்திய ஒரு உடன்படிக்கையை ஆராய பழைய ஏற்பாட்டின் மத்திய பகுதிக்குத் திரும்புவோம். **- தொடரும்**

நரகத்தின் மகனாக்குகிறீர்கள்"(மத்.23:15) என வேதம் கூறுகிறது. இவர்களுக்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் சம்பந்தமேயிராது. தாங்களே கிறிஸ்தவர்கள், அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், தரிசனம் பெற்றவர்கள், என அடிக்கிக் கொண்டே போவார்கள், ஆனால் உங்களுடைய சரீரமாகிய சபைக்குத் தலை யாரென்று கேட்டால் யார் யாரையோ கூறி, தம்முடைய இரத்தத்தையே சிந்தி சம்பாதித்துக் கொண்ட கிறிஸ்துவை மறுதலித்து சபைக்கு ஏதோ ஏதோ பெயர் சொல்லுவார்கள். அன்பு சகோதரிகளே, இவர்களே கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துமாயிருக்கிறார்கள். நீங்களும் இவர்களில் ஒருவராக இருப்பீர்களென்றால், இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அவரது நாமத்தை அறிக்கையிட்டு மகிமைப்படுத்துங்கள்.

"…..மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது"(1யோவா.4:2,3). அன்பு சகோதரிகளே, நீங்கள் தேவ ஆவியைப் பெற்றிருப்பீர்களென்றால், இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணி உங்கள் வார்த்தையினாலும், கிரியையினாலும், அவரை மகிமைப்படுத்து கிறவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவை அறிக்கை பண்ணாமல் மறுதலிப்பீர் களானால், "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து"1யோவா.2:22; 2யோவா.7 என்ற வசனங்களுக்கேற்ப வஞ்சகரும் அந்திக்கிறிஸ்துவுமாயிருப்பீர்கள். எனவே மனந்திரும்பி மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து பிதாவின் முன்பாக உங்களை மறுதலியாமல் அறிக்கையிடுவார்.



JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW
Contact: 94435 58041

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041







இன்றுவரை கொடுத்துக்கொண்டே இருக்கிறது. கனிகளைக் கொடுக்கக்கூடிய ஒரு மரம் என்னிடத்தில் உள்ள கனிகளை எல்லாம் இந்த மனிதன் பறித்துவிட்டான் என்று சொல்லி பின்பு அது கனிகொடாமலில்லை. திரும்வும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அதைப்போல கொடுக்க பழகுங்கள். பாக்கியவானாயிருப்பீர்கள்.

## ஆசிரியர் கடிதம்

**வாசகர் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்விதழை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். உங்களுடைய கருத்துக்களை எமக்கு எழுதி தெரியப்படுத்துங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ் உங்களுக்கு வந்தால் உடனே உங்களுடைய பதிவு எண்ணுடன் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். மாவட்டங்கள் தோறும் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வேதபாடவகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் நடத்தி வருகிறோம். நீங்களும் நடத்த விரும்பினால் உடனே தொடர்பு கொள்ளுங்கள்: 9443558041**

## நடப்புச் செய்திகள்

- ❐ கூடங்குளத்தில் 3,4 ஆவது அணு உலை பணிகள் தொடக்கம்.
- ❐ அரசு அதிகாரிகள் வெளிநாடுகளில் 7 ஆண்டுகள் பணிபுரிய விதிகள் தளர்வு
- ❐ ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்ற 'தி மேஜீக்கல் கீக்ரெட்' டின் 20 ஆவது ஆண்டு விழாவில் புத்த துறவி ஒருவர் ஈட்டி முனைக்கு மார்பு காட்டி சாகசம் செய்தார்.
- ❐ 'ரிங்கிங் பெல்' நிறுவனம் உலகிலேயே மிகக் குறைந்த விலைக்கு ஸ்மார்ட்ஃபோனை அறிமுகம் செய்துள்ளது. இது இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

**– நன்றி தினமலர் நாளிதழ்**

**ஜெபியுங்கள்**

- ⏩ சென்ற மாதங்களில் பெண்களுக்கா கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதற்காக…
- ⏩ கர்த்தருடைய சபையின் வளர்ச்சிக்காக…
- ⏩ ஊழியர்கள் உண்மையோடு உத்தமத்தோடும் கர்த்தருக்காக உழைக்க…
- ⏩ வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியங்களுக்காக…
- ⏩ புதிய வாசகர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக…
- ⏩ ஞானஸ்நானம் பெற்ற மீஞ்சூர் குடும்பத்தாருக்காக…

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**


'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

# யாரை நோக்கி நாம் ஜெபிக்கவேண்டும்?

## To Whom Should We Pray?

J.C.Choate



**நாம்** கிறிஸ்தவர்கள், தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருடைய சபையாகிய அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள், அவருடைய பிரசன்னத்திற்குள் வரக்கூடிய சிலாக்கியம் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். தேவன் நம்மோடு தம்முடைய வார்த்தையின் மூலம் பேசுகிறார், மேலும் நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுவதற்குத் தகுதியுடையவர்கள். நாம் அவரை துதிக்கவும், கனப்படுத்தவும் அங்கிகரிக்கப்பட்டவர்கள். அவர் செய்த சகலவற்றிற்காகவும், மேலும் தொடர்ந்து நமக்காகச் செய்கிறவற்றிற்காகவும் நம்முடைய நன்றிகளை செலுத்தக் கூடியவர்கள், மேலும் நம்முடைய விண்ணப்பங்கள் அனைத்தும் ஜெபத்தின் மூலமாக அவருக்குத் தெரிந்திருக்கக்கடவது.

நம்முடைய தேவன் மரித்தவர் அல்ல, ஆனால் அவர் ஜீவிக்கிறவர் மேலும் எப்போதும் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவராகவும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்போமானால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறவராகவுமிருக்கிறார் (1யோவா.5:14,15). ஏனென்றால், அவர் நம்மை உருவாக்கினார், நம்மை அவர் அறிகிறார் மேலும் நம்முடைய தேவைகளை அவர் அறிகிறார். ஆகையால் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் (மாற்.16:16; அப்.2:38,47), அவர் நம்முடைய பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். அவருடைய குடும்ப அங்கத்தினராயிருக்கின்ற படியினால், அவரோடு கூட நாம் மிகவும் விசேஷித்த உறவினைக் கொண்டிருக்கிறோம். அவர் நம்மை நேசிக்கிறார் நாம் அவரை நேசிக்கிறோம், ஆனபடியினால் அவர் எப்போதும் நம்மைக் குறித்து அக்கறையுடனி ருக்கிறார். மேலும் நாம் ஜெபிக்கும் போது நமக்குச் செவிகொடுத்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறார்.

தேவன் என்றென்றும் ஆவியாயிருக்கிறார் (யோவா.4:24). நாம் சந்திரனுக்கு, நட்சத்திரங்களுக்கு, மற்றும் இயற்கைக்கு அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்களுக்கு, அல்லது மதத்தலைவர்கள் என்ற உருவிலிருக்கிற மனிதருக்கு மற்றும் பரிசுத்த மனிதர்கள் என அழைக்கப்பட்டவர்களுக்குத் தலைகுனியக் கூடாது. இப்பேர்ப்பட்ட பொருட்கள் அல்லது மனிதர்கள் நம்மை இரட்சிக்க முடியாது. மேலும் அவர்கள் நம்முடைய ஜெபங்களுக்குச் செவிசாய்த்து பதிலளிக்க முடியாது.

நாம் ஒரே தேவனும் ஒரே கர்த்தரும் உண்டென்று அறிந்திருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு பிதாவாக ஒரே தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசு ஒரே கர்த்தராகவுமிருக்கிறார் (எபே.4:1-6). ஆனபடியினால் இயேசு




சூட்டப்பட்டிருந்த கிறிஸ்தவப் பெயர்களை மாற்றி இன்று பெரிய பெரிய பதவியில் அமர்ந்திருக்கின்றனர். அலுவலகத்தில் கிறிஸ்தவரல்லாதவர், ஆனால் வெளியில் கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளுபவர் அநேகர். இவையெல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவே நமக்கு நல் மாதிரியாகயிருக்கிறார். "...பிசாசு அவரை (இயேசுவை) மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால்,

இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:8,9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டவரையே பிசாசு இவ்வாறு சோதித்தான். "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்"(மத்.4:10). அன்பு சகோதரியே, உலகப்பொருளுக்காக இயேசுவை மறுதலித்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் இயேசுவை அறிக்கைபண்ணாத வஞ்சகரும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறீர்கள். மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிடுங்கள்.

இன்னும் அநேக ஸ்திரீகள் தங்களுடைய அன்பை விட்டுவிடுகின்றனர். சதா உலகக்காரியங்களுக்காகக் கவலைப்பட்டு இயேசுவை தங்களுடைய கிரியைகளில் மறுதலிக்கின்றனர். அன்பு சகோதரியே, தவறான நோக்கத்தோடே நீங்கள் இயேசுவை பின்பற்றுவீர்களானால் ஏமாந்து போவீர்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டால் நமக்கு உலக சம்பத்துகள் அனைத்தும் கிடைத்துவிடும் என லௌகீக இச்சைகளை நிறைவேற்றும்படி பின்பற்றாதீர்கள். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"(மத்.6:33) என்று வேதம் கூறுகிறது. முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள். உண்மையான வாஞ்சையோடு உங்கள் பாவங்கள் கழுவப்பட இயேசுவே தஞ்சம் என எண்ணுங்கள். இயேசுகிறிஸ்துவின் நீதியையும், பரிசுத்தத்தையும், பாவமன்னிப்பையும் நாடுங்கள். அப்போது உங்களுடைய சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வீர்கள். இயேசு கிறிஸ்துவை சரியான வழியில் பின்பற்றுங்கள். இயேசுவை உலகத்தார் முன் அறிக்கையிடுங்கள்.

அநேகர் மாயமான, பல தந்திரமான வழிகளைத் தெரிந்தெடுத்து வெளித்தோற்றத்தில் பக்திமான்கள் போல வேஷந்தரித்து மற்றவர்களை தங்களைப்போல மாற்றும்படி விரும்புகின்றனர். இப்பேர்பட்டவர்களைக் குறித்து, "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய்

பெண்கள் பகுதி



# யார் வஞ்சகர்?

Who are Deceivers?

*J.Glory Arjunan*

யார் வஞ்சகர்? பிரியமான சகோதரிகளே, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள் (2யோவா.7). ஆம், இன்றைய உலகில், இயேசுவே தங்களுடைய இரட்சகர், அவரே தங்கள் பாவங்களிலிருந்து விடுவித்து ஒரு பரிசுத்தமான வாழ்வை அளித்துள்ளவர், அவரே இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் கொடுக்க முடியாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறவர், அவர் ஒருவரே தங்களை உண்டாக்கினவர் என தைரியமாய் அறிக்கை பண்ணாதவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களைப் பார்த்து வேதம் வஞ்சகர் என்றும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

அநேக சகோதரிகள் மிக உற்சாகமாய் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் காலப்போக்கில் ஆதியில் கொண்டிருந்த அன்பையும், விசுவாசத்தையும் தள்ளிவிட்டு தங்களுடைய கிரியையினாலும், வார்த்தையினாலும் இயேசுவை அறிக்கை பண்ணாமல் மறுதலிக்கின்றனர். காரணம், உலகம் அவர்களை வழிவிலகச் செய்கிறது. ஐயோ, இயேசுவை அறிக்கையிட்டால் அல்லது நாங்கள் கிறிஸ்தவர்கள் எனக் கூறினால் அரசாங்கத்தின் சலுகைகள் பறிபோய்விடுமே, என்னுடைய குழந்தைகளின் பெயர் கிறிஸ்தவ பெயராயிருந்து கிறிஸ்தவர்கள் எனக் கூறுவோமானால் எந்த சலுகையும் பெற முடியாதே என்று எஸ்தர் என வைத்த பெயரை நாகலட்சுமி என மாற்றுகின்றனர். பீட்டர் என்ற பெயரை பெருமாள் என மாற்றுகின்றனர். அன்பு சகோதரியே உங்களுடைய குழந்தைகளின் பெயரை இவ்விதமாய் மாற்றி நிரந்தரமாக நித்திய தேவனிடமிருந்து கிடைக்கும் சலுகையை, ஆசீர்வாதங்களை இழந்து அநித்தியமான கொஞ்சகாலத்திற்கு மட்டுமிருக்கப்போகிற சலுகைக்காக இயேசுவை மறுதலிக்கிறீர்களா? கர்த்தர் உங்களைப் பார்த்து நகைப்பார். "மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்"(மத்.10:33) எனக்கூறுகிற இயேசுவின் தொனி உங்கள் காதுகளில் விழவில்லையா? மோசம் போகாதீர்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார். மனந்திரும்பி இயேசுவை அறிக்கைபண்ணுங்கள்.

வேறு சிலர், இயேசுவைத்தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டபோதிலும், திருமணத்திற்காகவோ, வேலை வாய்ப்பிற்காகவோ, வேறு உலக சம்பத்துக்களுக்காகவோ இயேசுவை மறுதலிக்கின்றனர். அநேகர் தங்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்கவேண்டுமென்பதற்காக தங்களுக்கு



தேவனுடைய குமாரனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறார், அவர் நம்முடைய மத்தியஸ்தர், பரிந்து பேசுகிறவர் மேலும் நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. அவ்வாறாக , இயேசுவின் மூலம் நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்லும் வழியைப் பெற்றிருக்கிறோம், ஆனபடியினால் நம்முடைய எல்லா ஜெபங்களும் இயேசுவின் மூலமே தேவனிடத்திற்கு ஏறெடுக்கப் படவேண்டியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறாக எழுதினான், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" (யோவா.2:1-3). மறுபடியும் எபிரேய எழுத்தாளன், "இவரோ (இயேசுவோ), விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன் படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தரா யிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபி.8:6) என்றான். இந்த எழுத்தாளன் கிறிஸ்துவே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபி.9:15) எனவும், தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியத்திற்குள் நம்மை வழிநடத்துகிற உடன்படிக்கை இதுவே எனவும் தொடர்ந்து கூறுகிறான்.

யாரை நோக்கி நாம் ஜெபிக்க வேண்டும்? என்ற நம்முடைய ஆரம்ப கேள்விக்குத் திரும்புகையில், கிறிஸ்தவர்கள் பிதாவாகிய தேவனை நோக்கி அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலம் ஜெபிக்கவேண்டு மென்பதே இதனுடைய பதிலாயிருக்கும். மற்ற யாரோ ஒருவரை நோக்கி ஜெபிப்பது பரிகாசத்துக்குரியதாகவும் நேரத்தை வீணடிப்பதாகவுமிருக்கும். கிறிஸ்துவின் மூலம் ஏறெடுக்கப்படாத ஜெபங்கள் கேட்கப்படாதவைகளாயிருக்கும், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவையல்லாத வேறே மத்தியஸ்தர் நமக்கும் பிதாவுக்குமிடையே இல்லை. நம்முடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு பதிலளிக்கப்பட நாம் எதிர்பார்ப்போமானால், நாம் கட்டாயம் பிதாவின் சித்தப்படியே ஜெபிக்கவேண்டும்.

## தேவனை நோக்கி ஜெபிக்கும்போது...

ஜெபம் நம்மை பெலப்படுத்தும்

ஜெபம் நம்மை உறுதிப்படுத்தும்

ஜெபம் நம்மை நாளும் வழிநடத்தும்



## மூன்று விதிகள் - The Rule of Three

மூன்று காரியங்கள் அடக்கவேண்டியவை:
கோபம், நாவு, போக்கு
மூன்று காரியங்கள் விருத்திசெய்யவேண்டியவை:
தைரியம், அன்பு, சாந்தம்
மூன்று காரியங்கள் புகழப்படவேண்டியவை:
சிக்கனம், உழைப்பு, தாமதமின்மை
மூன்று காரியங்கள் வெறுக்கப்பட வேண்டியவை:
கொடூரம், கர்வம், நன்றியறியாமை
மூன்று காரியங்கள் தேவையென விரும்பப்படவேண்டியவை:
ஆரோக்கியம், மனதிருப்தி, நண்பர்கள்
மூன்று காரியங்கள் ரசிக்கப்படவேண்டியவை:
பெருந்தன்மை, புத்திக்கூர்மையான சக்தி, வசீகரமிக்கவை
மூன்று காரியங்கள் கொடுக்கப்பட வேண்டியவை:
தேவையிலிருப்போருக்கு தர்மம்,
கவலையிலிருப்போருக்கு ஆறுதல்,
தகுதியுடையோருக்குப் பாராட்டு

3

**-The Voice of Truth International**

## அறிவோம்

- K.R.K.Ravi Asir
Associate Editor

தெரிந்து கொள்வோம்

- மனித உடலில் காணப்படும் தசைகளின் எண்ணிக்கை 639
- மனித மூளையில் மொத்தம் 1200 கோடி நரம்பு செல்கள் உள்ளன.
- மனிதன் இறந்த 3 நிமிடம் கழித்து மூளையில் இரத்த ஓட்டம் நின்று விடுகிறது.
- மூளையிலுள்ள நியூரான்களின் எண்ணிக்கை 1400 மனிதன் முதுகுத் தண்டின் எலும்புகள் 33
- மனித மூளையின் எடை 1.4 கிலோ
- மனித உடலிலுள்ள ரத்தத்தின் சராசரி அளவு 5லிட்டர்
- உடலின் மெல்லிய சருமம் கண் இமை.
- ஒரு மனித உடலில் கிடைக்கும் கொழுப்பில் இருந்து 10 சோப்புக்கட்டிகள் தயாரிக்கலாம்.
- மனிதனின் கண் நிமிடத்திற்கு 25 முறை மூடித்திறக்கிறது
- மனிதன் பேசும்போது முகத்தின் 72 தசைகள் அசைகின்றன.



## பிரதான கட்டளை எது?

## What Is The Greatest Commandment?

தேவனிடத்தில் அன்புகூரு?
கொலை செய்யாதே?
தேவனை தொழுதுகொள்
நற்கிரியைகளைச் செய்?
நல்ல அண்டை வீட்டாளனாயிரு?
விபசாரம் செய்யாதே?
ஓய்வுநாளை அநுசரி?
பிறனிடத்தில் அன்புகூரு?

*- Loy Mitchell, **TVOTI***

1. தேவனிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்புகூருவதே பிரதான கற்பனையாயிருக்கிறது! நியாயப்பிரமாணத்தில் தேறினவர்களில் ஒருவன் இந்த வினாவினால் அவரை சோதித்தான்: 'போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது?' இயேசு பதிலளித்தார்: 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை' (மத்.22:35-38).

a) இப்படிப்பட்ட பதிலை பரிசேயர்கள் எதிர்பார்த்தார்களோ என நான் சந்தேகிக்கிறேன்.

b) ஒருவேளை அவர்கள், “கொலை செய்யாதே” அல்லது “ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக” போன்ற கற்பனைகளை அவர் சொல்லுவார் என நினைத்திருக்கலாம்.

c) ஒருவேளை அவர்கள், “நற்கிரியைகளைச் செய்” அல்லது “விபசாரம் செய்யாதிருப்பாயாக” அல்லது “தேவனைத் தொழுதுகொள் என்று அவர்சொல்லுவார் என நினைத்திருக்கலாம்.

d) இயேசு தம்முடைய அழகான பதிலில் மிக ஆழமான கருத்தினை வெளிப்படுத்தினார்.

e) அவருடைய பதில் முதல் நூற்றாண்டு ஜனங்களுக்கு மிகச் சிறப்பானதாயிருந்தது அத்தோடு இன்று நமக்கு அது சிறப்புடையதாகவே இருக்கிறது.



f) பிரதானக் கற்பனை **தேவனிடத்தில் அன்புகூருவதே!**

வல்லமையுடையவராக இருக்கிறார் என்பதை அது எடுத்துரைக்கும்.

▶▶ அது மனுஷனுடைய வல்லமைக்கு மேலானதாகவும் அதை அழிக்கும் வல்லமையுடையதாகவும், எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் ஒருவரால் பாதுகாக்கப்படுகிறதாகவும் இருக்கும்.

▶▶ அதன் ஆக்கியோன் பூரணராயிருக்கிறபடியால் நிலையான தேவைக்காககவோ அல்லது தற்செயலான மறுபதிப்புக்காகவோ அல்லாமல் மனுஷரால் எழுதப்பட்ட ஒவ்வொரு புத்தகமும் உண்மையானதாயிருக்கிறது.

▶▶ இந்நூல் முழுவதிலும், அதினுடைய ஒவ்வொருபக்கத்திலும் ஒரு அடிப்படை நோக்கத்தை கொண்ட ஒரே தேவனையும் அந்நோக்கத்திற்கு பின்னே அவர் மனுஷனோடு கொண்டுள்ள ஈடுபாடு தொடர்புகளை வெளிப்படுத்தும்.

▶▶ இந்நூல் தேவனுடைய அன்பின் பரிசுத்தத்தை பிரதிபலிக்கக்கூடியதாகவும் தவறு செய்யும் மனுக்குலத்தை விரும்பி பரிதபிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

**தேவனுடைய புத்தகம்**

பல் வேறுபட்ட மார்க்க புத்தங்களை நாம் கவனமாக படிக்கும்பொழுது அது வெளிப்படுத்துகிற இந்த எல்லா தேவைகளுக்குமான ஒரே ஒரு அளவீடு என்னவென்றால் - அது வேதாகமம் மட்டுமே.

▶▶ சில புத்தகங்கள் கட்டாயமாக ஒரு ஒழுங்கான அடிப்படையில் பரிசீலனை செய்து மாற்றப்படவேண்டும். அப்புத்தகங்களை ஆதரிக்கிறவர்கள் அவர்களுடைய பழமையான மார்க்க முறைமை இந்த நவீனகாலத்துக்கு ஏற்புடையதாக இல்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

▶▶ சில புத்தகங்கள் ஒரு கடவுளை மனுஷனுக்கு சற்று மேலாக மனுஷனை போன்றே ஆசைகள் சோதனைகள் மற்றும் பாவங்களுக்கு கீழ்ப்பட்டவராகவே காண்பிக்கின்றன.

▶▶ சில புத்தகங்கள் அநேகம் தேவர்களை நகைக்கக் கூடியவகையில் கற்றறிந்தோரால் அசட்டை செய்யப்பட்டு உண்மையற்றவைகளை தங்கள் மனதுக்கு ஏற்றபடி வெளிப்படுத்துகிறார்கள்.

▶▶ சிலர் மனிதனிடமுள்ள மேன்மையாக இருப்பது மேன்மையானவைகளை செய்வதற்கான வாஞ்சையை தூண்ட தவறிவிடுகிறார்கள். மனுஷனுக்கு முன்பாக ஒரு முன் மாதிரியான பரிசுத்தத்தை அடையும் நிலையில் வாழுகிற ஒரு கடவுளை குறித்த சித்தரிப்பு இவர்களுக்கு இல்லை.

▶▶ சிலர் அற்புதங்களை செய்வதாக உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால் அவைகள் அற்புதம் என்ற வார்த்தையையே பரியாசம் செய்வதாக இருக்கிறது.


▶▶ மரணத்துக்கு பின் மனுஷனுக்கு என்ன சம்பவிக்கிறது என்ற விரிவான காட்சிகளை சில புத்தகங்கள் சித்தரிக்கின்றன.



## பாடம் - 18 வெள்ளத்தினால் ஞானஸ்நானம்

## Flood Baptism

*- Jerry Bates*




1. இந்தப் பாடப்பகுதி இன்று உலகிற்கு மிக அவசரமான தேவை. மத சம்பந்தப்பட்ட உலகில் இன்று அதிகமாக குறிப்பிடப்படாத ஒன்றாக இது இருக்கிறது.

2. இந்த வசனங்களில் பேதுரு அவசியமாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்.

முதலாவது ஞானஸ்நானத்தை மற்றொன்றைப் போல என்று குறிப்பிடுகிறார்.

பிறகு ஆச்சரியப்படத்தக்க விதமாக ஞானஸ்நானம் இரட்சிக்கிறது என்கிறார்.

**நல் மனச்சாட்சியின் பலன் என்று அவர் குறிப்பிடுகிறார்.**

அவர் மேலும் சொல்லுகிறார். ஞானஸ்நானம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாய் நம்மையும் இரட்சிக்கிறது என்கிறார்.

3. இந்த மூன்று பகுதிகளில் ஒன்று இதை வாசிப்பவரை ஆச்சரியப்படச் செய்யலாம்.

ஒன்றைப்போல இன்னொன்று என்றால் என்ன என்று ஆச்சரியப்படலாம்

மற்றவர்கள் ஞானஸ்நானம் இட்சிப்போடு எவ்விதத்திலும் தொடர்புடையது என்பதைப் பற்றி ஆச்சரியப்படலாம்.

அநேகர் நல்மனச்சாட்சியின் பதில் என்ற சொற்றொடருக்கு என்ன பதில் என்று கேட்கலாம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எப்படி இரட்சிப்போடு தொடர்புடையதாயிருக்க முடியும். அவருடைய மரணம் எப்போது பாவமன்னிப்பைக் கொடுத்திருக்க முடியும் எனலாம்.

1. இன்னொன்றைப் போன்றது என்பதன் விளக்கம் இதற்கான கிரேக்க வாத்தை அன்டிடுபான் அதன் பொருள் ஒருமாதிரியை ஒட்டி அமைக்கப்பட ஒரு செயல், ஒரு விதமான என்பதற்கு பொருந்தும் விதம் என்பது அந்த உருவம் அல்லது வரப்போகிற இன்னொன்றின் பிரதி (நிதி) எனலாம்..

2. ஆகவே உங்களுக்கு ஒரு விதமான என்பதும் இன்னொன்றைப்போல ஒன்று என்பதும் இருக்கிறது.

பேழையிலே நோவா மற்றும் அவர் குடும்பத்தினரின் இரட்சிப்பு என்பது மாதிரி ஞானஸ்நானம் என்பது அதே மாதிரி ஞானஸ்நானம் இரட்சிப்பதை உருவகமாகச் சொல்லவில்லை. ஆனால் வெள்ளத்தில் இருந்த தண்ணீர்கள் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் அடையாளமாக இருக்கிறது.

**ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்புக்குமுள்ள தொடர்பு:**

ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது இல்லாவிட்டால் இல்லை.

1. அது இரண்டுமாக இருக்க முடியாது. அல்லது சில வேளைகளிலோ சில சமயங்களிலோ (அப்படியிருக்க முடியாது)

2. மனிதனை சிருஷ்டித்ததற்கு தேவன் வருத்தப்பட்டார். அவனை அழித்துவிடத் தீர்மானித்தார்.

நோவா கர்த்தருடைய பார்வையிலே கிருபை பெற்றான் (ஆதி.6:8) வேதாகமத்தில் இந்த இடத்தில் தான் முதன் முதலில் கிருபை என்ற வார்த்தை குறிப்பிடப்படுகிறது.

1. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் (ஆதி.6:7).

2. தேவன் தன்னுடைய திட்டங்களை நோவாவுக்கு அறிவித்து ஒரு பேழையைக் கட்டும்படி கட்டளையிட்டார் (ஆதி.6:14). உலகத்திற்கு இது மதியீனமாகத் தோன்றியிருக்கவேண்டும். நோவா கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியானான் (எபி.11:7). விசுவாசம் மட்டும் அல்லது கிருபை மட்டுமே நோவாவை இரட்சித்திருக்க முடியாது. நோவாவின் கீழ்ப்படிதலும் அதற்கு தேவைப்பட்டது.

**உண்மையிலேயே நோவாவை இரட்சித்தது எது?**

1. தேவன் அவனை இரட்சித்தார் என்று நாம் சொல்லலாம். ஏனென்றால் அவர் (தேவன்) இரட்சித்தார். (அவருடைய வல்லமை மற்றும் திட்டம்.

2. அந்தப் பேழை இரட்சித்தது என்று நாம் சொல்லக்கூடும் ஏனென்றால் அதுவும் இரட்சித்தது.

3. அவருடைய விசுவாசம் இரட்சித்தது என்று நாம் சொல்லக்கூடும் ஏனெனில் அதுவும் இரட்சித்தது. (விசுவாசமில்லாமல் அவன் ஒருபோதும் பேழையைக் கட்டியிருக்க முடியாது).

4. பேதுரு சொல்லுகிறார்; அவர் (நோவா) தண்ணீரினால் அதன் மூலமாக இரட்சிக்கப்பட்டார் என்று (உருவமாக அல்ல)

**காட்சி என்ன?**

1. தண்ணீர் பேழையை தாங்கிப்பிடித்தது.

உலகத்தின் அழிவிலிருந்து அதிலிருந்தவர்களை மீட்டது.

அழிக்கப்படப் போகிற பழைய உலகத்திலிருந்து (வாழக்கையிலிருந்து) ஒருவனை விடுவிக்க கீழ்ப்படிய வேண்டிய திட்டத்தில் ஞானஸ்நானம் கடைசியாக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனை.

2. பழைய பாவ உலகை தண்ணீர் அழித்தது. அது பூமியை பாவத்திலிருந்தும் அதன் பொல்லாங்கிலிருந்தும் சுத்திகரித்தது. நோவா புதிய உலகத்திற்குள்ளாக விடுவிக்கப்பட்டான். உண்மையிலேயே அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வு கிடைத்தது.

ஞானஸ்நானத்திலே பழைய பாவ மனிதன் அடக்கம் பண்ணப்படுகிறான். அதின் தண்ணீராலான கல்லறையிலிருந்து ஒருவன் புதிய வாழ்க்கையை வாழ்வதற்கு வருகிறான். மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோ.6:4).

ஆனால் சிலர் சொல்லுகிறார்கள்; நோவா உண்மையிலேயே தண்ணீரிலிருந்து இரட்சிக்கப்பட்டார். தண்ணீர் மூலமாக அல்லவென்று.


1. இதைக்குறித்து வார்த்தைகள் அப்படிச் சொல்லவில்லை.

2. தேவன் தண்ணீரை அனுப்பியதாலே (வெள்ளம்) தான் பேழை நோவாவை இரட்சிக்க முடிந்தது. தேவன் அக்கினியை அனுப்பாமல் இருந்திருந்தால் அவர்கள் நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். பேழையிலே இருந்ததால் அவர்கள் தண்ணீர் மூலமாக காக்கப்பட்டார்கள்.

3. எப்படியிருப்பினும் தண்ணீர் இரட்சிக்கும் சக்தியல்ல. கர்த்தரே தண்ணீரால் இரட்சிக்கிறார். தண்ணீர் வழியாக பேழையிலிருந்து நோவா இரட்சிக்கப்பட்டார். நாமும் கிறிஸ்துவால் தண்ணீர் மூலமாய் இரட்சிக்கப்படுகிறோம்.




# எது தேவனுடைய புத்தகம்?
# Which Is God`s Book?



-Betty

பெண்கள் பகுதி

**பாடம் 7 தொடர்ச்சி**




ஆனால் நாம் கவனித்திருக்கிறபடியே நம்மை சுற்றியிருக்கிற உலகத்தையும், நம்மையும் கவனிப்பதே ஒரு சிந்திக்கக்கூடிய மனுஷனை இந்த எல்லா கடவுள்களும், மாக்கங்களும் உண்மையானவைகளாக இருக்க முடியாது என்று நம்பச் செய்கிறதற்கு போதுமானதாக இருக்க முடியும். நாம் காண்கிற இந்த காரியங்கள் அனைத்தும் பல சிருஷ்டிகர்கள் அல்ல, ஒரே சிருஷ்டிகர் இருக்கிறார் என்று சாட்சி கொடுக்கின்றன. அந்த புத்தகங்கள் தெய்வீகமான ஆசிரியரால் எழுதப்பட்டவை என்று உரிமை கொண்டாடுகிறவர்களின் ஆசிரியருக்கான தன்மை ஒன்றுக்கொன்று வேறுபட்டதாயிருக்கிறது, இயற்கையாகவே அவைகள் அனைத்தும் தெய்வீகமான தொடக்கத்தை உடையவைகளாக இருக்க முடியாது. தெய்வீகமான சிருஷ்டிகர், பூரணமான ஒருவர் தாம் உருவாக்கிய மற்ற வெளிப்படுத்துதல்களுக்கு முரண்பாடாக இருக்க முடியாது என்பது தெளிவாக இருக்கிறபடியால் அவைகள் அனைத்தும் அந்த ஒரே பூரணமாக தெய்வீகமான சிருஷ்டிகரிடமிருந்து வர முடியாது. சத்தியமானது சத்தியத்திற்கே முரண்பாடாக இருக்கிறதில்லை. நம்முடைய பிரச்சனை என்ன வென்றால், நாம் அநேக நூல்களை பகுத்து ஆராய்ந்து எந்த ஒரு நூல் ஆட்சேபனைக்கு இடமின்றி மனுஷனுடைய திறனுக்கு மேலான நூலை ஏற்படுத்தும் திறனுடையவரால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கான நிரூபணம் உடையதாக அது இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதாயிருக்கிறது.

**தேவனுடைய மற்றும் அவருடைய புத்தகத்தின் குணாதிசயங்கள்**

எந்த ஒரு புத்தகம் மெய்யாகவே தேவனிடத்தில் இருந்து வந்திருக்கிறதோ, அந்த புத்தகத்தின் பக்கங்கள் முழுவதிலும் தேவனுடைய குணாதிசயங்கள் காணப்படும்.

▸▸ அது தொடக்கம் முதல் முடிவு வரை எந்த முரண்பாடும் இன்றி - முழுமையான ஐக்கியத்தை வெளிப்படுத்தும்.

▸▸ அது மனுஷன் உருவாகும் முன்னே நடந்த காரியங்களை வெளிப்படுத்தி, மரணத்துக்கு பின் சம்பவிக்கப்போகிறது என்ன என்பது பற்றிய ஒரு தெளிவான காட்சியை அளிக்கக் கூடியதாக இருக்கும். ஏனென்றால் தேவன் நித்தியமானவராயிருந்து சாட்சியளித்திருக்கிறார், மேலும் சம்பவிக்கப் போகிற சகல காரியங்களையும் குறித்து சாட்சியளிக்கிறார்.

▸▸ அது மனுஷன் அறியாத பல உண்மைகளை கொண்டிருக்கும், புத்தகத்தின் ஆசிரியர் சகல காரியங்களையும் அறிந்திருக்கிறபடியால் வருங்கால காரியங்களை முன்னுரைக்கும். தேவன் தம்முடைய சிருஷ்டிக்கு எதையெல்லாம் மிக சிறந்ததாக காண்கிறாரோ அதை செய்கிறதற்கு அவர் அளவில்லாத